## வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் – பெரம்பூரில் நவீன

# அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜன.30-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.01.2026) திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரம்பூர் நெடுஞ்சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 21 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள "அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகையை" திறந்து வைத்து, 10 இணைகளுக்கு திருமணத்தை நடத்திவைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி மணமக்களை வாழ்த்தினார்.**

**அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகை திறப்பு**

பெரம்பூர் நெடுஞ்சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 21 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் மிகப்பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ள "அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகையை" முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இச்சிறப்புமிக்க திருமண மாளிகையை பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்தி கொள்ளும் வகையிலும், குறிப்பாக திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மங்களபுரம், ஏகாங்கிபுரம், ஆதிசேஷன் நகர், சாஸ்திரி நகர், பிஸ்லின் நகர், ஜோதி நகர், சேமாத்தம்மன் நகர் ஆகிய பகுதி மக்கள் தங்களது இல்லத் திருமணம் உள்ளிட்ட சுபநிகழ்ச்சிகளை குறைந்த செலவில், அதிக வசதிமிக்க இம்மண்டபத்தில் மனமகிழ்வுடன் நிறைவாக நடத்திடும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது.

தரைதளம் மற்றும் மூன்று தளங்களுடன் கொண்ட 30,000 சதுரடி கட்டடப் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகையில் தரைத்தளத்தில் இருசக்கரம் மற்றும் நான்கு சக்கரம் வாகனங்கள் நிறுத்தும் வசதிகள் மற்றும் சமையலறை கூடமும், முதலாவது தளத்தில் ஒரே சமயத்தில் 175 நபர்கள் அமர்ந்து உணவு அருந்தும் வகையில் உணவுக்கூடமும், இரண்டாவது தளத்தில் 570 இருக்கைகளுடன் கூடிய முற்றிலும் குளிரூட்டப்பட்ட திருமண மண்டபம், மணமகன் மற்றும் மணமகள் அறைகளும், மூன்றாம் தளத்தில் 4 எண்ணிக்கையிலான விருந்தினர் அறைகள், மின்தூக்கி வசதிகள், நவீன கழிப்பறை உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் இத்திருமண மாளிகை கட்டப்பட்டுள்ளது.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் 10 இணைகளுக்கு மணவிழாவை நடத்தி வைத்தார்!**

இப்புதிய அண்ணல் அம்பேத்கர் திருமண மாளிகையில் முதலமைச்சர் அவர்கள் 10 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி மணமக்களை வாழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டல குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் சார்பில் கட்டி முடிக்கப்பட்ட 19 கட்டிடங்களை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் தி.சினேகா, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் உதயா கருணாகரன், ஒன்றியச் செயலாளர்கள் எம்.டி.லோகநாதன், கே.பி.ராஜன் மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

## அமைச்சர் தா.மோ. அன்பரசன் நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்!

# அய்யப்பன்தாங்கல் - பரணிபுத்தூர் ஊராட்சியில் திராவிட பொங்கல் விழா!

## குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் அறிக்கை!

*சென்னை, ஜன.30-*

*காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் அய்யப்பன்தாங்கல் ஊராட்சி மற்றும் பரணிபுத்தூர் ஊராட்சிகளில் திராவிட பொங்கலை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (30.01.2026 வெள்ளிக்கிழமை) மாலை 04.00 மணியளவில் அய்யப்பன்தாங்கல் ஊராட்சி ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் தலைமையில் ஊராட்சி மன்ற தலைவர் ஜெமிலா பாண்டுரங்கன் வரவேற்புரையில் லோகநாயகி சாமிநாதன், உஷா நந்தினி எத்திராஜ் , கே.எத்திராஜ், பொன்.ஜீவா, எஸ்.ராஜாதேசிங்கு, டி.எஸ்.எம். ஜெயகரன், டி.ஆர்.சாரதி பெரியநாயகம், கே.தங்கராஜ், சுலைமான் சையத், எஸ்.ஜனார்த்தனன் அவர்களின் முன்னிலையிலும், பரணிபுத்தூர் ஊராட்சியில் மாலை 06.00 மணியளவில் நடைபெறுகிறது.*

*ஆர்.ஆர்.நகரில் ஊராட்சி மன்ற தலைவர் கௌரி தாமோதரன், வரவேற்புரையிலும் சி.பாண்டியன், எஸ்.சந்தானம். கலாவதி சந்தானம் கு.பிரவீன்குமார் முன்னிலையிலும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான தா.மோ. அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நலத்திட்டங்களை வழங்க உள்ளார்.*

*இதில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ. மனோகரன், ஆலந்தூர் தொகுதி பார்வையாளர், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் சீ.பத்மபிரியா, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் சரஸ்வதி மனோகரன் , குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு துணை தலைவர் உமா மகேஸ்வரி வந்தே மாதரம், ஒன்றிய கழக நிர்வாகிகள் கே.வசீகரன், பூங்கொடி அரச, பா. ராஜேந்திரன், எஸ்.கே.துளசிங்கம், மாவட்ட அணியின் நிர்வாகிகள் தி.க. பாஸ்கரன், தா. அன்பழகன், தமிழரசி சுரேஷ் உள்ளிட்ட அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொள்ள உள்ளனர்.*


*எனவே குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து கிளைக் கழக நிர்வாகிகளும் இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி சேர்ந்த நிர்வாகிகளும் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தே மாதரம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 344 வது நாள்!

## வில்லிவாக்கம் மேற்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!



*சென்னை, ஜன.30-*

*முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 344 ஆம் நாளான - கழகத்தலைவர்தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (29.01.2026), வில்லிவாக்கம் மேற்கு பகுதி: 1) வட்டம் 95, கிழக்கு மாடவீதி, திருவள்ளுவர் தெரு சந்திப்பு, 2) வட்டம் 95 அ, பாரதி நகர் 2வது தெரு, ஆகிய பகுதிகளில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.*

*இந்நிகழ்ச்சியில் அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ.ஜெயின், வே.வாசு, லதா வாசு.எம்.சி. டி.வி. செம்மொழி.எம்.சி. சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன்.எம்.சி வானவில் விஜய், எம். சுரேஷ் வில்லிவாக்கம் மேற்கு / கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: சிட்கோ சி.சேகர், ஆர்.தீனதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி(எ) உமா சங்கர், சொ.முருகேசன், ப. லோகுபாபு, K.S.பாபு எ. வேதா, சீ.வீக்னேஷ், ச. மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ.துரை, ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, பெரம்பூர் R. ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*

## கேரள மாநில தி.மு.க. முன்னாள் பொருளாளர்

# வடக்கந்தரை பிரேமன் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன.30

கேரள மாநில, தி.மு.க. முன்னாள் பொருளாளர் பிரேமன் அவர்கள் மறைவுற்றார் என்ற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

கேரள மாநிலம், பாலக்காடு மாவட்டத்தில் உள்ள வடக்கந்தரையைச் சேர்ந்த கேரள மாநில தி.மு.க. முன்னாள் பொருளாளர் திரு.பிரேமன் (வயது 83) அவர்கள் வயது மூப்பின் காரணமாக மறைவெய்தினார் என்ற செய்தி அறிந்து வேதனையடைந்தேன்.

அன்னாரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், கேரள மாநில கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ்நாட்டில் கோவை – மதுரை நகரங்களுக்கு

# மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு அனுமதி நிராகரித்தது ஏன்?

## மக்களவையில் – டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஜன.30

தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நகரங்களுக்கான மெட்ரோ ரயில் திட்ட முன்மொழிவுகளை ஒன்றிய அரசு ஏன் நிராகரித்தது என்று மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

கதிர் ஆனந்த் கேள்வி வருமாறு:-

தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய நகரங்களுக்கான மெட்ரோ ரயில் திட்ட முன்மொழிவுகளை ஒன்றிய அரசு நிராகரித்துள்ளதா? அப்படியானால், அதற்கான காரணங்களுடன் அதன் விவரங்கள் தருக?

இன்று வரை நாட்டில் உள்ள நகரங்களில் அங்கீகரிக்கப்பட்ட மெட்ரோ ரயில் திட்டங்களின் முழுமையான பட்டியல், அந்தந்த நகரங்களின் மக்கள் தொகை மற்றும் ஒவ்வொரு திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட செலவும் இடம் வாரியாக தெரிவிக்கவும்.

இவ்வாறு அவர் கேள்வி கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தில் ராஜாங்க அமைச்சர் டோகன் சாஹு எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:--

தமிழ்நாடு அரசால் சமர்ப்பிக்கப்பட்ட கோயம்புத்தூர் மற்றும் மதுரை நகரங்களில் மெட்ரோ திட்டங்களுக்கான முன்மொழிவுகளை மத்திய அரசு ஆய்வு செய்து, மாநில அரசுக்கு அவதானிப்புகளை தெரிவித்தது.

**கோயம்புத்தூர்**

குறைந்த சராசரி பயண நீளம் மற்றும் சாலையில் இருக்கும் சராசரி வேகம், மிகக் குறைவான நேரச் சேமிப்பு காரணமாக மெட்ரோ அமைப்பிற்கு மாதிரி மாற்றம் எதிர்பார்க்கப்படவில்லை.

கோயம்புத்தூர் முனிசிபல் கார்ப்பரேஷன் (சிஎம்சி) பகுதிக்கு கூடுதலாக, உள்ளூர் திட்டமிடல் பகுதியின் (எல்பிஏ) மக்கள்தொகை மெட்ரோ முறையில் சேவை செய்ய எடுக்கப்பட்டுள்ளது. சிஎம்சி பகுதியை விட 5 மடங்கு பெரிய எல்பிஏவில் வசிக்கும் மக்கள்



முன்மொழியப்பட்ட மெட்ரோ அமைப்பைப் பயன்படுத்துவது கடினம்.

கோயம்புத்தூர் மெட்ரோவின் 34 கிலோமீட்டர் நீளமுள்ள நெட்வொர்க்கிற்கு ஒரு நாளைக்கு 5.9 லட்சம் பயணிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது, இது அதிக மக்கள்தொகைக்கு சேவை செய்யும் சென்னை மெட்ரோ கட்டம்-1 இன் 54.10 கிமீ செயல்பாட்டு நெட்வொர்க்கில் ஒரு நாளைக்கு 4 லட்சம் பயணிகளின் உண்மையான எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது அதிகமாக உள்ளது. எனவே, DPR இல் திட்டமிடப்பட்ட ரைடர்ஷிப் புள்ளிவிவரங்கள் யதார்த்தமானவை அல்ல.

பல இடங்களில், போதிய ரைட் ஆஃப் வே (RoW) இல்லாததால், நிலையத்தை உருவாக்குவது சாத்தியமில்லை.

**மதுரை**

GoTN சமர்ப்பித்த விரிவான மொபிலிட்டி திட்டத்தில் (CMP) தற்போதைய பயணிகளின் எண்ணிக்கையானது பேருந்து விரைவான போக்குவரத்து அமைப்புக்கு (BRTS) நியாயமானது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்றுவரை நாட்டில் உள்ள நகரங்களில் அங்கீகரிக்கப்பட்ட மெட்ரோ ரயில் திட்டங்களின் முழுமையான பட்டியல், அந்தந்த நகரங்களின் மக்கள் தொகை மற்றும் ஒவ்வொரு திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட செலவும் இடம் வாரியான விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

அதன்படி, இந்தியாவில் பாட்னா, சூரத், கொச்சி, இந்தூர், போபால், நாக்பூர்-தானே-மும்பை, ஆக்ரா, லக்னோ, கான்பூர், நொய்டா-கிரேட்டர் நொய்டா ஆகிய இரண்டாம் கட்ட நகரங்களில் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப் படும்.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

## கருநாடக மாநில தி.மு.க. சார்பில் – பெங்களூரில்

# தொ.மு.ச. பேரவை விருதுகள் வழங்கும் விழா!

## பி.கே.ஹரிபிரசாத் – கவிஞர் தமிழ்தாசன் சிறப்புரை!

*பெங்களூரு, ஜன.30-*

*கருநாடக மாநில தி.மு.க. தொ.மு.ச. பேரவை சார்பில் பெங்களூருவில் 1.2.2026 ஞாயிறு பிற்பகல் 3.00 மணியளவில் விருதுகள் வழங்கும் விழா நடைபெறுகிறது. இதில் பி.கே. ஹரிபிரசாத் எம்.எல்.சி., கவிஞர் தமிழ்தாசன் ஆகியோர் சிறப்புரை யாற்றுகிறார்கள்.*

*இதில் தமிழ்த்தாய் வாழ்த்து : த.நாராயண மூர்த்தி, வரவேற்புரை: மு.இராஜசேகர் மற்றும் ந.ராமசாமி தலைமை தாங்குகிறார்.*

*இதில், திருமதி ஏமாவதி சண்முகத்துக்கு பெரியார் விருது, எஸ். சிவசங்கரனுக்கு அண்ணா விருது, க.கணேசனுக்கு கலைஞர் விருது, ரா. மா.செல்வத்துக்கு பேராசிரியர் விருது, வெ.ரகுபதிக்கு மு.க.ஸ்டாலின் விருது, ஜான் ராப்பாயிலுக்கு முரசொலி மாறன் விருது, பா.மணி வண்ணனுக்கு உதயநிதி ஸ்டாலின் விருது, முத்துமணி நன்னனுக்கு முரசொலி செல்வம் விருது வழங்கப்படுகிறது.*

*மேலும் இதில் ஆர்.எஸ். கிரி, தி.கோ.தாமோதரன், போர் முரசு கதிரவன், சரவணன், கே.எஸ். சுந்தரேசன், ஏ.வி.மதியழகன், எம்.பெரியசாமி, ந.இராமசாமி, கே. தட்சிணாமூர்த்தி, ஏ.டி.ஆனந்தராஜ், மு.கருணாநிதி, ஆர்.அன்பழகன், சர்குண இ.மதி, முருகமணி செல்வம் உள்பட கழக வழக்கறிஞர்கள் மற்றும் கழகத் தோழர்கள் பலர் கலந்து கொள்கின்றனர்.*

*வி.எஸ்.மணி நன்றி கூறுகிறார்.*



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வட்டக் கழக துணைச் செயலாளர் ஜி.பி.ஆனந்தகுமாரின் தாயார் ஜி.பூங்காவனம் அவர்களின் 16 ஆம் நாள் நினைவு நாளை முன்னிட்டு அன்னாரின் திருவுருவப் படத்தை மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினரும், சென்னை பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினருமான காரம்பாக்கம் க.கணபதி திறந்து வைத்து அஞ்சலி செலுத்தினார். இதில் 11 வது மண்டலக் குழுத் தலைவர், வடக்கு பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், தெற்கு பகுதி கழக துணைச் செயலாளர் வே.மதியழகன், மாமன்ற உறுப்பினர், கல்வி நிலைக்குழு உறுப்பினர் ரமணி மாதவன் மற்றும் வட்டத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**குடந்தை பத்மநாபன்**
**சனவரி 30 (1989)**



**குடந்தை வட்டக் கழகமாக இருந்தபோது முதல் வட்டச் செயலாளராகவும், அடுத்து குடந்தையின் முதல் நகரக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**1962ஆம் ஆண்டு விலைவாசி உயர்வுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**நெருக்கடிநிலை காலத்தில் மிசா கைதியாக ஓராண்டுகாலம் சிறையிலிருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**